


# ஒளியின் இறுதி ஒப்பம்

தொகுப்பாசிரியர்
ஏ.எம்.எம்.ஜாபீர்

மருதம் கலை இலக்கிய வட்டம்
சாய்ந்தமருது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13720
894.8111

PUBLIC LIBRARY
MARUTHAMUNAI
MUNICIPAL COUNCIL
KALMUNAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LENDING SECTION
PUBLIC LIBRARY
MARUTHAMUNAI
MUNICIPAL COUNCIL
KALMUNAI
L-13720
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏ.எல்.எம்.றிபாஸ்
சட்டத்தரணி
பிரசித்தநொத்தாரிஸ்
077 9351334
071 6356564

மர்ஹூம் காதிபுல் ஹுதா பன்னூலாசிரியர்
எம்.எம்.எம். நூறுல்ஹக் அவர்களின்
நாற்பதாவது நாள் நினைவுதின வெளியீடு

# ஒளியின் இறுதி ஒப்பம்

**நூலாக்கக் குழு**

ஏ.எம்.எம். நஸீர்
எம்.எஸ். ஹமீதா
எம்.எஸ்.எம். றின்ஸான்
எம்.சி.நாபிலா

**நூல் வடிவமைப்பு**
ஏ.எம்.எம். ஜாபீர்

**பதிப்பு**
அப்னா அச்சகம்,
மருதமுனை

**மலர்வு**
2021. மார்ச் 14

**தொகுப்பாசிரியர்:**
ஏ.எம்.எம்.ஜாபீர்

**வெளியீடு:**
மருதம் கலை இலக்கிய வட்டம்
சாய்ந்தமருது - 05



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளியின் இறுதி ஒப்பம்


Title of the Book : Oliyin Iruthi Oppam / Subject : Poem / First Edition 14 March 2021/ Author: A.M.M. Jafeer, 129B, Osman Road, Sainthamaruthu - 05/ 0779694546/ Copy Right - Marutham Kalai Ilakkiya Vattam (Regd No: NEP/EM/CA/AM/ SM/05/2004) Type Setting : A.M.M. Jafeer / Printed by: Abna Printers Maruthamunai-0772256648/Book Size:1/8/Peper - Bank Paper 80Gsm/Pages: 60/Price: 200/=

**ISBN : 978-624-5708-00-0**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹிஜ்ரத்



ஒளியொன்று
தன்சிறகை விரித்து பறந்தது
அதன் மூலவேரை சந்திக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பித்தப்பை இல்லாத ஒரு பேனா

மர்ஹூம் எம்.எம்.எம். நூறுல்ஹக் இலக்கிய மணலில் இளம் வயதில் அலுக்காமல், சளைக்காமல், அஞ்சாமல் நாற்பது வருட காலம் (1981 - 2021) என்ற மிக நீள் தூரத்திற்குப் பயணித்த ஓர் ஆச்சரியமான ஒட்டகம் .

உண்மையை பருகி எழுதியமையால் அரசியல், மத. இனவாதிகளால் பல மனஅழுத்தங்களை சந்தித்தவர். இருந்தும் நம்பிக்கை என்ற தன் பலமான கால்களால் அத்தடைகளைத் தாண்டி வளர்ந்து, உயர்ந்து பல விருதுகளை வென்ற ஓர் அற்புத வரிக்குதிரை.

இவர் இலக்கிய உலகில் கவிதை, இஸ்லாமிய கட்டுரைகள், நூல் விமர்சனங்கள், அரசியல்துறை சார்ந்த படைப்புக்கள் என பல்துறைகளிலும் எழுதியுள்ளார். எல்லா திசை மலர்களிலும் வண்டுகள் எழுதி இருப்பதுபோல நமது நாட்டின் தேசிய பத்திரிகைகளான தினபதி, தினகரன், தினகரன் வாரமஞ்சரி, வீரகேசரி, சுடர்ஒளி, தினக்குரல், நவமணி, விடிவெள்ளி, எங்கள் தேசம், சரிநிகர் என பல்வேறு பத்திரிகைகளிலும் இந்த நூறுல்ஹக் ரீங்காரமிட்டிருப்பது உண்மை ஆகும்.

நூறுல்ஹக் 1964.08.27ஆந் திகதி சாய்ந்தமருதில் பிறந்தார். அவ்வூரின்ண அல் - ஹிலால் வித்தியாலயத்தின் பழைய மாணவருமாவார். அத்தோடு அவர் ஊடகக் கற்கை நெறியில் டிப்ளோமாப் பட்டம் பெற்றுள்ளார்.

இவர் அல்-ஹுதா (1984 - 1987) பத்திரிகையின் பிரதம ஆசிரியராகவும் பார்வை (1989 - 1990), உதயம் (1991 - 1992), சங்கமம் (1994 - 1995), இடி (2001 - 2002), முஸ்லிம் குரல் (2003 - 2004), எழுவான் (2006) ஆகிய பத்திரிகைகளின் பிரதி ஆசிரியராகவும் கடமையாற்றியுள்ளமை பத்திரிகை துறையின் ஆளுமையின் ஆவணமாகும்.

நவமணி பத்திரிகையின் பிராந்திய ஊடகவியலாளராக(2014) இருந்ததுடன், சமவெளி இணைய தளத்தின் ஆசிரியராகவும் (2016) செயற்பட்டமை சமகால ஊடகத்துறையோடு இணைந்து சென்றிருப்பதானது அவரது ஆளுமையின் இன்னொரு பரிமானமாகும்.

அகில இலங்கை சமாதான நீதவானாகிய இவர். சாய்ந்தமருது மருதம் கலை இலக்கிய வட்டம், ஹுனுப்பிட்டிய இலக்கிய வட்டம், சாய்ந்தமருது இளைஞர் இஸ்லாமிய இலக்கிய வட்டம், சாய்ந்தமருது முன்னேற்றப் பேரவை ஆகியவற்றின் செயலாளராக நீண்டகாலம் பணிபுரிந்துள்ளார். அத்துடன் அவர் சிறந்த சமூக சேவையாளருமாவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலவிற்கு ஒத்த கருத்துள்ள சொற்கள் உண்டு. இவ்வாறு நூறுல்ஹக்கின் பேனாவிற்கும் மருதூர்மெய்யொளி, எம்.என்.எச், செஞ்சுடர், இலக்கனி, இனன், நபா, முஜாதலா, சிறாஜுல் மில்லத், அபூ மிஸ்பாஹுல் ஹக், அபூ பாத்திமா பர்வீன் என புனைப்பெயர்களும் இருக்கின்றன. இருந்தும் நிலா தன் ஒத்தகருத்துச் சொற்களால் எழுதியதில்லை. ஆனால் இவரின் இந்த புனைப்பெயர் சொற்கள் எழுதியுள்ளது.

இவரின் பேனாவிற்கு பித்தப்பை இல்லை. எனில், தீவும் தீர்வுகளும் (1998), சிறுபான்மையினரின் சில அவதானங்கள் (2002), முஸ்லிம் பூர்வீகம் (2006), ஈமானிய பேரொளிகள் (2009), அரசியல் சிந்தனைத்துவமும் சமூக இருப்பும் (2011 - இந்நூல் 2012ஆம் ஆண்டில் கிழக்கு மாகாண சாகித்திய விருதைப் பெற்றது.) முஸ்லிம் அரசியலின் இயலாமை (2016), யார் துரோகிகள் (2017) என பல புத்தகங்களை களைத்துப்போகாமல் எழுதி சரித்திரம் படைத்துள்ளது.

இவர் இஸ்லாமிய ஆய்வு நிலையமும் இலங்கை தென் கிழக்கு ஆய்வு மையமும் இணைந்து இளம் படைப்பாளருக்கான இலக்கிய ஆளுமைக்கான விருது - 2002, காதிபுல் ஹுதா - நேரிய எழுத்தாளர், (கடந்த 2006.09.22ஆம் திகதி கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையில் நிகழ்ந்த எம்.எம்.எம். நூறுல்ஹக் அவர்களின் எழுத்தாக்கப் பணிக்கான வெள்ளிவிழா நிகழ்வுகளின் போது 'ஒளியின் சிறகுகள்' சிறப்பு மலரையும் வெளியிட்டு காதிபுல் ஹுதா எனும் பட்டத்தையும் அளித்து சாய்ந்தமருது அபாபீல்கள் கவிதா வட்டம் இவரை கௌரவித்தது.), வெற்றி மாத இதழ் சஞ்சிகையின் "ஆக்க நினைவு விருது" - 2006, ஊடகப் பணிக்கான நினைவுச் சின்னம் - 2007, சமூக சேவைக்கும் எழுத்துப் பணிக்குமான விருது - 2007, அரசியல் சிந்தனைத்துவமும் சமூக இருப்பும் நூலுக்கான சாகித்திய விருது - 2012, எழுத்துப் பணிக்கும் ஊடகப் பணிக்குமான நினைவு விருது - 2015, இலக்கிய பணியை கௌரவித்த விருது - 2016, கலாசாரத் திணைக்களத்தின் "கலைஞர் சுவதம்" விருது 2017, சமூக சேவையைப் பாராட்டி நினைவுச் சின்னம் - 2020, குருமகுடம் விருது 2020, கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் ஊடகத்துறைக்கான வித்தகர் விருது - 2020 என பல விருதுகளை பெற்றுள்ளமை விஷேடமாகும்.

இவரது தந்தை மர்ஹூம் அல்-ஹாஜ் மௌலவி முஹம்மது முத்து(பஹ்ஜி) என்பவராவார். இவர் சாய்ந்தமருதின் முதலாவது அரபிக் ஆசிரியர் என்ற வரலாற்றுக் குறிப்பைக் கொண்டவர். அத்தோடு இலங்கையின் தேசிய பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் கட்டுரைகள் எழுதியுள்ளார். ஆகவே எழுத்தாளுமை கொண்ட ஒரு தந்தை என்ற மரத்திலிருந்து நூறுல்ஹக் என்ற விழுது இலக்கிய உலகில் எழுதியிருப்பது ஆச்சரியமல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாய்ந்தமருதிலிருந்து வெளியிடப்பட்ட மருதமலர் (2008), சாய்ந்தமருது வரலாறு (2009) ஆகிய நூல்களில் இவரது தந்தையைப் பற்றியும் நூறுல்ஹக்கினதும் தரவுகளும் தகவல்களும் பதியப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கதாகும்.

நூறுல்ஹக்கின் துணைவி எஸ்.யூ. கமர்ஜான்பீபி (சமாதான நீதவான்) நான் மூர்ச்சையாகிய போது (2017) என்ற கவிதைத் தொகுதியை வெளியிட்டுள்ள ஒரு கவிதாயினி. அத்தோடு ஹுனுபிட்டிய இலக்கிய வட்டத்தின் செயலாளருமாவார். மகன் எம்.என். மிஸ்பாஹுல் ஹக் (கணக்காளர்) இவரும் ஒரு கவிஞர், சிறுகதை எழுத்தாளர். கட்டுரைகளையும் எழுதி வருபவர். அண்மையில் பிரான்ஸ் நாட்டிலிருந்து வெளிவருகின்ற 'நடுஇதழ்' இணையத்தள சிறுகதைப் போட்டியில் முதலாம் இடத்திற்கான ரூபா 25000.00 பரிசையும் வென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவரின் கவிதை இதழ் வெளிவருவதற்கான சகல ஏற்பாடுகளும் வரும் நிலையில் தந்தையின் சுகவீனம் காரணமாக அது விடுபட்டிருந்தது. இன்ஷா அல்லாஹ் விரைவில் நாம் எதிர்பார்க்கலாம். மகள் எம்.என். பாத்திமா பர்வீன் (மௌலவியா). எனவே மிஹ்லார் மட்டுமல்ல அவரின் மனைவி, மகன், மகள் ஆகியோர்களும் இலக்கிய வானில் நட்சத்திரங்களாக மின்னிக் கொண்டிருப்பது ஓர் உண்மையின் வெளிச்சமாகும்.

நூறுல்ஹக் அச்சமற்ற, ஊழலற்ற ஓர் எழுத்தாளர் ஆவார். இவைகளுக்கு எடுத்துக் காட்டாக "எழுதுவது என்பது இன்று மிகக் கஷ்டமானதும் அச்சப்படத்தக்கதுமான பணியாக மாறியுள்ளது. இதற்கு மத்தியில்தான் இந்த நூலாசிரியர் இடைவிடாது எழுதி வருகிறார்" - முஸ்லிம் பூர்வீகம் (2006). ரமீஸ் அப்துல்லாஹ், தலைவர் மொழித்துறை, தென்கிழக்குப் பல்கலைக்கழகம் ஒலுவில். கடந்த 2021.03.05ஆம் திகதிய விடிவெள்ளி பத்திரிகையில் (40நாள் நினைவாக) நூறுல்ஹக் பற்றி கலாபூஷணம் மருதமுனை பீ.எம்.எம்.ஏ. காதர் எழுதியுள்ள கவிதையொன்றில் "சமூக மேம்பாட்டை கையிலெடுத்து/சமூக சீர்கேட்டை புழுதி தட்ட/பேனா பிடித்த உத்தமன்/ஊழலற்ற எழுத்தாளன் நூறுல்ஹக்." இவ்வரிகளையும் குறிப்பிடலாம்.

இவரது வார்த்தைகள் நமது மொழியை மிகச் சரியாகவே உச்சரிக்கும். அதேசமயம் அவர் பேனாவிற்கு சொற்கள் பஞ்சமில்லை இதற்கு, "மகிழ்ச்சி உங்கள் பெயர் அழகானது. உங்கள் தமிழ் ஒலியன்கள் தெளிவானவை. நீங்கள் சமூக சிந்தனை உடையவராகவும் தோன்றுகிறீர்கள். கட்டுரை எழுதுவதில் தேர்ச்சி காணப்படுகிறது. அதாவது கருத்தை நன்கு தியானித்துத் தெளிந்த பின் மொழியும் நற்சீலம் பாராட்டுக்குரியது. இதில் என்ன புதுமை? உங்கள் அடையாளமே அதுதானே!.. ஜெர்னலிஸ்ட்" சண்முகரத்தினம் விவேகானந்தா என்பவர் முஸ்லிம் அரசியலின் இயலாமை (2016) என்ற நூலில் குறிப்பிட்டுள்ளமை சான்றாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூறுல்ஹக் சாய்ந்தமருதைச் சேர்ந்த மர்ஹூம்களான அல்-ஹாஜ் மௌலவி ஐ.எல். முஹம்மது முத்து (பஹ்ஜி) , ஐ.எல். பாத்துமா தம்பதியினரின் கனிஷ்ட புதல்வராவார். இவர் கடந்த 2021.01.25ஆம் திகதி தமது 57 வயதில் காலமானார். அன்னாரின் ஜனாஸா இவரது மகளின் வசிப்பிடமான ஏறாவூரில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

கடந்த 2021.02.28ஆம் திகதி சாய்ந்தமருது றியாழுழ் ஜன்னாஹ் வித்தியாலயத்தில் மருதம் கலைக் கூடலின் ஏற்பாட்டில் நீத்தார் நினைவுகள் இரங்கல் உரை நிகழ்வு இடம்பெற்றது. இதில் பன்னூலாசிரியர் வித்தகர் நூறுல்ஹக் பற்றி கவிஞர் சட்டத்தரணி அலறி ஏ.எல்.எம்.றிபாஸ் அவர்கள் உரையாற்றினார். இப்பாடசாலையில் நூறுல்ஹக்கின் தகப்பன் 1969ஆம் ஆண்டு அரபிக் ஆசிரயராக பணிபுரிந்துள்ளார். மேலும் இப்பாடசாலைக்கு இப்பெயர் நாமத்தை சூட்டியவரும் இவரது தந்தையான மர்ஹூம் அல்-ஹாஜ் மௌலவி முஹம்மது முத்து(பஹ்ஜி) என்பது குறிப்பிடத்தக்கது.

அந்திவானத்திடம் வர்ணங்கள் உள்ளது வார்த்தைகள் இல்லை. அதிகாலையிடம் சூரிய பேனாவுள்ளது கடதாசிகள் இல்லை. இவரோ வார்த்தைகளின் வர்ணங்களால் பேசியவர். புத்தக நிலங்களில் பல படைப்பு நகரங்களை கருத்தாழமிக்க கற்களால் கட்டியெழுப்பியவர். கடதாசிக்கு வரலாற்றுப் பாடம் நடத்தியவர்.

**எம்.எம்.எம். நகீபு**
**நூலாசிரியர் -**
**Not Out முரளிதரன்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல்களால் நெருங்குகிறோம்...

ஒருவன் எதனை எழுதுகிறானோ அதைப் பொறுத்தே அவனின் எழுத்தாளுமையின் பெறுமதி தீர்மானிக்கப்படுகிறது. அந்த வகையில் மர்ஹூம் எம்.எம்.எம்.நூறுல்ஹக் எடுத்துக்கொண்ட கருத்தாடல்கள் சமூகத்தின் விலைமதிக்கத்தக்க உரிமைகளை பேசக்கூடியதாக அமைந்துள்ளன. அதனால்தான் பலரின் நேசத்துக்கும் வாசிப்புக்கும் உட்படுத்தப்பட்டுள்ளார். இப்பெறுமானத்தின் அடிப்படையிலேயே அவரின் இழப்பு கணிப்பிடப்படுகிறது.

எல்லா எழுத்தாளர்களாலும் ஊடகவியலாளர்களாலும் அரசியல் தலைவர்களாலும் ஏகோபித்து கூறியுள்ள அவரின் பண்பு - நேர்மையான, நடுநிலையான, உண்மைத்தன்மையை வெளிப்படுத்தும் பக்கசார்பற்ற ஓர் எழுத்தாளர். இது நூறுல்ஹக்குக்கே உரித்தான நிலையான பண்புசார் காரணியாகும். இக் காரணமே இவரின் எழுத்தின் உயிர்த்தன்மை; காலம் கடந்தாலும் நினைவாக்கத்திற்கு இட்டுச்செல்லும் தொடர்; என்றால், அது மிகையாகாது.

அரசியல், வரலாறு சார்விடயங்களுக்கு அப்பால், அவரின் பத்தி எழுத்துக்கள் கருத்தூன்றி கவனிக்கப்படவேண்டியதொன்றாகும். அந்நிய சமயத்தவர்களிடம் இஸ்லாம் எவ்வாறு தவறாக ஊடகப்படுத்தப்படுகின்றதோ அதே போன்று இஸ்லாமியர்களுக்கு மத்தியில் இஸ்லாமிய மெய்யியல் தவறாக பிரச்சாரமாகியுள்ளது. இந்த கட்டுக்கோர்ப்பை உடைப்பதில் நூறுல்ஹக்கின் பத்தி எழுத்துக்கள் மேலோங்கிய காரணங்களின் முன்வைப்பினூடாக அறிந்துகொள்ளலாம்.

கையெழுத்து, றோணியோ, அச்சு, இணையத்தளம் என்ற தொடரில் அவரின் எழுத்துலகப் பயணம் இடம்பெற்றுள்ளது. எழுத்தாக்கத்தின் பல்வேறு கட்டங்களின் ஊடாக அவர்வெளிப்பட்டுள்ள விதம், காலத்தை ஒன்றித்த நெருக்கமானது; அவரின் எழுத்தின் உயிர்த்தன்மைக்கும் நீடிப்புக்கும் வழிவகுத்துள்ளன. மேலும் பத்திரிகைத் துறையிலும் ஊடகத்துறையிலும் அவருக்கிருந்த அனுபவம் மேலும் பங்களிப்பு செய்துள்ளது.

அவரின் குடும்பச் சுமையை குறைப்பதற்கு அவரது இல்லாள் கவிதாயினி எஸ்.யூ.கமர்ஜான்பீபி மேற்கொண்ட அர்ப்பணிப்பு நூறுல்ஹக்கின் எழுத்தாக்கத் தொடருக்கு வழிவகுத்திருந்தது; என்பது, இன்றியமையாத உத்வேகப் பலமாகும்.

நூறுல்ஹக்கிற்கு மிகவும் விருப்பமானது நூல்கள். அதனால், அவரின் குடும்பங்கள் ஒன்றிணைந்து நூலினூடாக அவரின் ரூஹை நெருங்குகிறார்கள். எழுதாதவர்களையும் எழுதவைத்துள்ளார்; முதற்தடவை கவிதை எழுதியவர்கள் பலருண்டு. இவ்வன்பளிப்பை ஏற்றுக்கொள்வாய் என்று எங்கள் ஆன்மாக்கள் நினைக்கின்றன.

இந்நூல் வெளிவருவதற்கு உதவிய எம்.எஸ்.எம்.றின்ஸான், எம்.சீ. நாபிலா, ஏ.எம்.நியாஸ், ஏ.எம்.நபீல், யூ.எல். சர்மிலா, றொபினா நபீல், ஹசீனா ஸஹுர், எம்.எம்.நயிமா, ஜாபிக்கா சஹீட், கவிதைகளை அனுப்பியவர்களுக்கும், அச்சகத்தாருக்கும் மற்றும் கலாநிதி எம்.எம். மஸ்றுபா (சிரேஷ்ட உதவி நூலகர்), எஸ். இன்பம் ஆகியோர்களுக்கு உளமார்ந்த நன்றிகள்.

**ஏ.எம்.எம்.ஜாபீர்**
**பொருளாளர் - மருதம் கலை இலக்கிய வட்டம், சாய்ந்தமருது - 05**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வர்ணம் தீட்டப்படாத சொற்கள்....

பன்னூலாசிரியர், கிழக்கு மாகாண வித்தகர், காதிபுல் ஹுதா மர்ஹூம் எம்.எம்.எம். நூறுல்ஹக் இவருக்கு வர்ணம் தீட்டப்பட்ட வார்த்தைகளோ வானுயுர்ந்த சொற்கூட்டங்களோ தேவையில்லை. அப்படிச் சொல்வது கடலுக்குள் நீர் உள்ளதா என்று தேடுவது போலாகிவிடும். ஏனெனில் பலராலும் பரவலாக அறியப்பட்டவர்.

இவரது படைப்புகளின் நரம்புகளில் ஆழ்ந்த கருத்துக்கள் ஓடுவதால் இன்றும், அவை, உயிருடன் ஜீவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

சென்ற 2021.01.25ஆம் திகதி இவர் மறுவாழ்வுக்கான பயணத்தை ஆரம்பித்தார்; என்பது இறைவிதி. அத்தோடு தற்கால நம் சமூகம் எதிர்கெண்டுள்ள பிரச்சினைகளுக்கு தன் பேனாவால் தீர்வு சொல்லக்கூடிய ஒரு சிந்தனைவாதியை நாம் இழந்துவிட்டோம் - என்ற கவலைக்குறியையும் ஏற்படுத்தியுள்ளது.

மேற்குறிப்பிட்ட கருத்தை இவர் மறைவுக்காக அரசியல் , இலக்கிய , தேசிய பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி, பேஸ்புக்குகளில் முன்வைத்த அந்த அனுதாபவரிகள் உண்மை என்று சொல்லி நிற்கின்றமை குறிப்பிடத்தக்கது.

எனவேதான் இவரை கௌரவிக்கும் "ஒளியின் இறுதி ஒப்பம்" எனும் இக்கவிதை நூலினை சாய்ந்தமருது மருதம் கலை இலக்கிய வட்டம் வெளியிடுவதில் பெருமிதம் அடைகிறது.

இந்நூலை தொகுத்தளித்த ஏ.எம்.எம். ஜாபீர் மற்றும் மர்ஹூம் எம்.எம்.எம். நூறுல்ஹக் பற்றி குறிப்பை எழுதித் தந்த எம்.எம்.எம். நகீபு அவர்களுக்கும் நன்றிகள் உரித்தாகட்டும்.

மர்ஹூம். எம்.எம்.எம் நூறுல்ஹக்கின் மறுமை வாழ்வின் ஈடேற்றத்துக்காகவும் பிரார்த்திக்கின்றேன்.

**ஏ.எம்.எம். நஸீர்**
**தலைவர்**
**மருதம் கலை இலக்கிய வட்டம்**
**சாய்ந்தமருது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிரார்த்தனையோடு.......**

ஆராத்துயரில் மூழ்கி
ஆயுளைக் குறைத்துக்கொண்டு
ஆறடி கபுருக்குள் அமைதியாய்
அடங்கிய என்னவனே!

மீளாத்துயரில் மிதக்கும்
மீண்டிட முடியாத சோகங்கள்
மனதை வாட்டி வதைக்குதடா
மௌனமாய் நகரும் காலத்தோடு

உலகமென்னும் போர்க்களத்தில்
உலாவந்து உளம் தோய்ந்து
போராட்டங்கள் போதுமென்று
பொறுமையாய் மரணம் தழுவியதோ

மறையொளியை மனதிலேற்றி
மெய்யொளியாய் உம்மையுயர்த்தி
அறிவொளிக்கு அயராதுழைத்து
அகம் மகிழ்ந்த என்னவனே!

இருண்டத் திரையகற்றி
இல்வாழ்க்கை தேர்ந்தெடுத்து
ஆத்மீகத்துக்குள் உலாவந்து
அடங்கிப் போனதுவே உங்களுயர் மூச்சு



ஹக்கென்னும் நாமம் சூடி
ஹபீபை நெஞ்சில் நிறுத்தி
திருநபிக்குடும்பத்தோடு சந்தோஷமாக
தானிருப்பீர் ஹக்கின் அன்போடு

இருட்டுலகம் வேண்டாமென்று
இடம் மாறி பயணித்தீரோ
நிலையான வாழ்வதனை நீரேற்று
நிம்மதியாய் இறுதிப் பயணத்தை அடைந்தீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளை யாடையணிந்து
விண்ணேறிய வீரமகனே
எங்கள் ஆவலையும் முத்து நபியிடம்
எடுத்துரைக்க முந்திப் போனீரோ

வறுமை என்னை வாட்டியது
வதங்கிடவில்லை நீயிருப்பதனால்
சோதனைகள் தொடராய் வந்தபோதும்
சோர்ந்து போனதில்லை
உம் நினைவோடு வாழ்ந்ததனால்

இன்று நீரில்லை எம்மருகில்
இறுதி பயணத்தோடு சங்கமமானீர்
உயர்ந்த உள்ளம் உனதானதால்
உன்னத நிலை நீரடைவாய்.....

**எஸ்.யூ.கமர்ஜான்பீபி**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நதியென ஒரு வாழ்வை
காலம் கடல் சேர்த்திருக்கிறது...
அநுயோகம் பூண்ட காட்டுப்புழையென அந்த நதி,
அதன் பாதையெங்கும் அறிவை மட்டும் அள்ளிக்கொண்டு
ஞானத்தால் அகண்டாகாரம் கொண்டது..

பசுமை படர்ந்து குளிர்ச்சி ஏறிய தரைகளில்,
மதுரம் செறிந்த பழச்சோலைகளில்,
மாயக் கவர்ச்சி சேர்ந்த எந்த நிலவெளிகளில்
சுடரேந்திய அந்த நதி,
தன்னை தரித்துக்கொள்ள நினைத்ததில்லை..
அவைகளில் பற்றுவைக்கவுமில்லை.

தன்னை நோக்கி கிளை நீட்டிய காடுகளின் வேர்களில்
அது தன் ஞானத்தின் அகலவுரையை அள்ளித் தெளித்தே
கடந்திருக்கிறது


"அகாதத்தில் பத்திரப்படுத்தவும்,
கேட்பவருக்கு அள்ளிக் கொடுக்கவும் அவரிடம் எஞ்சி இருந்ததெல்லாம்
தேடிய அறிவும், அவை செறிந்த புத்தகங்களும்தான்"

எப்படி பயணிக்கிறோம் என்பதில் நதிகளின் கவனம் குவிவதில்லை,
எதற்காக பயணிக்கிறோம் என்கிற பிரக்ஞையில்
ஒரு வாழ்வு வரலாறாவதின் ரசவாதம் இருக்கிறது...
மகத்தான நதிகள் தன் வரலாற்றில் நோக்கம் குவிக்கிறது...

எழுத்துக்களை ஊற்றென மாற்றிய ஒரு நதி,
தன் எழுத்துக்களால் ஜீவிதம் பெற்று சதாவும் அதன் வழியே
ஓடிக்கொண்டே இருக்கும்,
"மரணத்தின் மெய்யுணர்வு சேர்ந்தவர்கள் அதை உடுத்திக்
கொண்டாடக் காத்திருப்பார்கள்,
அவர்களை கொண்டாட இன்னொரு பிரபஞ்சம் காத்திருக்கும்"

வாழ்வு போதுமென மரணத்தை காத்திருந்து ஏற்பவர்கள்
பற்றின் வலியேதும் உணராமலே விலகும் திரைகளை
பற்றிக்கொள்வார்கள் போல்..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அகவிருள் களைந்து,
அச்சம் தெளிந்து,
நதியின் :ஆழத்தில் படிந்த மௌனத்தின் புன்னகை சூடி,
ஹக்கின் சுடரேந்திய முடிவின் முகம்
நேசர்களின் கரம் சேர்ந்தவர்களின் சாட்சியானது...

நதியென ஒரு வாழ்வை
காலம் மெய்யான கடல் சேர்ந்திருக்கிறது...

மிஸ்பாஹுல் ஹக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீடிக்கப்பட்ட ஹயாத்து

மன்னித்துக் கொள்
உன்னை நான்
நல்லடக்கம் செய்ய வில்லை
என் இதய மண்ணறைக்குள்

உன் ஜனாஸாவை
பார்த்த போதுதான்
புரிந்து கொண்டேன்
நீ எம் சமூகத்திற்கு
உண்மையைச் சொன்னதால்
உன் உதட்டுக் கரத்தில்
புன்னகையைப் பரிசளித்து விட்டு
இஸ்ராயீல் அலைஹிஸ்ஸலாம்
றூகைக் கைப்பற்றியுள்ளமையை

உனது பிரிவின்
துயரச் ஸூரில்
என்
இதயத்தின் அமைதிக்கிராமம்
அடியோடு அழிந்து போய்விட்டது
மீண்டும்
அதனைக் கட்டியெழுப்புதல்
எனக்கு ஒரு போதும் சாத்தியமில்லை



நம் சமூகத்தில்
கடைசி காலக் கட்டங்களில்
அறிவாளிகள் நல்லவர்கள் என
அதிகம்பேர் இருக்க மாட்டார்கள் என்று
நான் கேள்விப்பட்ட
ஒரு பேச்சின் அடிப்படையில்
உன் இழப்பை வைத்து
கியாமத்து நாள் எம்மை நெருங்கிவிட்டதாகவே பார்க்கிறேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ ஏன் சொல்லவில்லை
எழுதவில்லை என்று தெரியாது
உனது ஆயுளை ஐம்பத்தேழாக
அல்லாஹுத்தாலா நிர்ணயித்திருந்த
நிஜக் கதையையும்
உன் எழுதுகோலின் படைப்புகளின் ஹயாத்தை
இன்னும் நீடித்துப்போட்டிருக்கும் வரலாற்றையும்

உனது கப்ரின்மீது நடப்பட்டுள்ள
மீஸான் கட்டை பேனாக்கள் காற்று கடதாசிகளில்
நீ இன்னும் எழுதி முடிக்கவுள்ள
இரண்டு நூல்களையும் எழுதி முடிப்பதோடு
அதன் செடிகளில்
இன்ஷா அல்லாஹ்
நாளை அது பூக்குமென்று நம்புகிறேன்

அல்லாஹுவின் நாட்டத்தின்படி
அவன் - உனக்கு வைத்த
நூறுல்ஹக் என்ற
அந்த நாமத்தின் பின்னால்
மறைந்திருக்கும்
ஒளியின் கால்களால்
இன்ஷா அல்லாஹ்
ஸிராத்தல் முஸ்தகீம் பாலத்தை
நீ கடப்பாய்

இப்போதாவது சொல்லிவிடு
நீ பிறந்த போது அழுதது
உம்மாவிடம்
பேனை கேட்டா?



உன்னை இன்னும்
சுமந்துகொண்டுதான் இருக்கிறது
என்
கண்ணின் கருவறைகள்

இப்போதும்
வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறேன்
உன் பிரிவின் துயரத்துடன்

எம்.எம்.எம். நகீபு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொலைத்து விட்டேன் என் தோழனை

தோழா உன் சாதனையினை எழுதத்
தெரியாதென்றாயினும் உன்னாலான
வேதனையினை பகிர்கின்றேன் பாரினிலே

தோழா தொலை தூரம் நீ சென்றாலும்
துயர் பாராமல் உனை தேடி வந்திருப்பேன் - நான்
வருவேனென்றெண்ணியே தெரியாது
மீள முடியா தூரம் சென்றுவிட்டாய் தோழா

தோழன் என்று தோழமையை வளர்த்து விட்டு
நீ சென்றாய் தோழா
நீ பெற்ற பெண்ணுக்கு தகப்பனாய்
என் வாழ்வில் நீ எனக்கு மாமனாய்



மாமன் என்ன மருமகன் என்ன
தோழர்களாய் இருப்போம் நாம்
தோழமையுடன் என்றாய் தோழா

என் வாழ்வில் இடைநடுவே வந்தாய்
ஆவலாய் இருந்தேன் இறுதி வரை
வருவாய் என்றிருந்தேன் சென்றுவிட்டாய் தோழா

தோள் கொடுக்க என் தோழன் இருக்கின்றான்
என்றெண்ணிய வேளை
துயரத்தை கொடுத்து விட்டுச் சென்றாயே தோழரே

உன் மனம் அறியும் வாய்ப்பினை
தந்த இறைவன்
உன்னருகினில் இருக்கும் வாய்ப்பினை
இழந்து விட்டேனே என் தோழா

தந்தையின்றி இருந்த எனக்கு உன் அன்பால்
தந்தையை ஞாபகமூட்டினாய்
மாமா என்றிருந்தால் மறந்தாவது போயிருப்பேன்

இறுதி நேரமென்றறியாது உன் அருகில் நானிருந்தேன்
எழுத்தென்று அறியாத என்னை
உனைப் பற்றி எழுத வைத்து விட்டாயே தோழா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


யாரில் நீ பாசம் கொண்டாயினும் அதை
அதிகளவில் வெளிக் கொள்ளாதே
அதிலிருந்து மீளுவது பெரும் வலி என்பதை
சொல்லி விட்டுச் சென்றுவிட்டாய்

நீர் எமை விட்டு மறைந்தாலும்
உம் எழுத்தென்னும் ஒளி
நிழலாய் தொடரும்

தூய்மை அன்பு தூங்காது
தூரமென்றாலும் அதன் ஏக்கம் மங்காது
உன் நினைவில் நீங்கா சுமையால்
என் வேதனையை முடிக்க முடியாமல் முடிக்கிறேன்
நிச்சயம் நானும் ஒரு நாள் அங்கு வருவேன்

உன் தோழமையும்
எம் தூய அன்பும் சேர்ந்து
சுவனபதியின் பூஞ்சோலையாக
இறைவன் ஆக்குவானாக
ஆமீன்

**அப்துல் சியாம்,**
**ஏறாவூர்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொள்கை எழுத்தாளன் நூறுல்ஹக்

உள்ளத்தைத் தெளிவுபடுத்தி
உணர்வை பேனா வாக்கி
எழுத்தை உயிராய் மதித்த
நல்ல எழுத்தாளன் நூறுல்ஹக்.

நானா என்று நாளும்
நட்புடன் நல்லுறவை பேணி
நல்லிணக்கம் கண்ட நாயகன்
உண்மை எழுத்தாளன் நூறுல்ஹக்.

உள்ளத்தில் கள்ளம் இல்லாமல்
உறவில் பள்ளமில்லாமல் வெள்ளமாய்
உண்மையன்புடன் நல்லுறவு கொண்ட
உயர்வான எழுத்தாளன் நூறுல்ஹக்.

சமூக மேம்பாட்டை கையிலெடுத்து
சமூக சீர்கேட்டை புழுதிதட்ட
பேனா பிடித்த உத்தமன்
ஊழலற்ற எழுத்தாளன் நூறுல்ஹக்.



ஊருக்கு உயர்பணி செய்ய
உறுதியான மனம் கொண்டு
யாருக்கும் பணிந்து நிற்காத
நேர்பணி செய்த நூறுல்ஹக்.


நேருக்கு நேர் நின்று
நெஞ்சை நிமிர்த்தி நல்ல
உண்மையைத் தினம் சொன்ன
உத்தம எழுத்தாளன் நூறுல்ஹக்.

நேர் கொண்ட பார்வை
நெறிமுறை தவறா ஒழுக்கம்
எழுத்தால் போர் செய்த
எனதன்பு எழுத்தாளன் நூறுல்ஹக்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறரிடம் கை ஏந்தி
பிழைப்பு நடத்தாமல் நல்ல
உழைப்புடன் என்றும் வாழ்ந்த
கொள்கை எழுத்தாளன் நூறுல்ஹக்.

கலாபூஷணம்
பி.எம்.எம்.ஏ.காதர்
மருதமுனை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எப்படி மறப்பேன் ?

உள்ளத்திலுன் நினைவை வாழவிட்டு
உலகிற்கு விடைகொடுத்தாய் எனது நண்பா
கள்ளங்கள் அறியாத வயதில் நாமும்
கனிவுடன் சேர்ந்திட்ட காலம் முதலாய்
பள்ளங்கள் படுகுழியைக் கடந்தும் வாழ்வில்
பாசத்திலொன்றாகப் பயணம் செய்தோம்
அள்ளியே தெளித்துந்தன் கருத்து மழையில்
அன்பனை நனைத்துடன் சென்றதேனோ ?

இலக்கியப் பாதையில் நாமொன்றிணைந்து
இலக்குடன் செய்திட்ட பணிகள் பலவாம்
துலங்கிடும் ஒளியாக நீரிம் மண்ணில்
துலங்கிய எழுத்திலே தூய்மை சேர்த்து
பலநூலாய் சமூகத்தின் சிந்தை தொட்டு
பணிபுரிந்தவுமக்கிறையோன் பரிசுதரவே
நலம்தர அழைத்தானோ உம்மையிழந்து
நாம் தவிக்கும் நினைவுகளென்று மாறும் ?

கற்றோனாய் நல்லறிவில் ஆளுமை சேர்த்து
காலத்தால் அழியாத நூற்கள் தந்தாய்
வற்றாத ஆன்மீக அறிவும் செறிந்த
வியத்தகு நண்பன் இனியார் கிடைப்பார்
உற்றோரும் உறவுகளும் உனக்காய்கலங்கி
உள்ளங்கள் வேதனையைச் சுமந்து வாடும்
பற்றினையறிவாயோ உந்தன் குரலை
பதியங்கள் விட்டு நீ விரைந்ததென்ன ?

பிறந்திட்ட யாவருமே இறப்பதுண்மை
பிறந்தாலும் சமூகத்திற்கெழுதி வாழ்ந்தீர்
மறவாதும்பணி இம்மண்ணில் வாழும்
மறந்திடோம் மரணிக்கும் வரையிலுன்னை
இறைவாயெம் நண்பன் நூறுல்ஹக்கின்
இன்னல்கள் துயரங்கள் யாவும் நீக்கி
நிறைதவ்பாதனையேற்று பாவம்பொறுத்து
நீடிக்கும் மறுமையிலே சுவனம் சேர்ப்பாய்



**மருதூர் ஜமால்டீன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மௌத்தாகிப் போன விசாரிப்புக்கள்

நயிமா!
மேதாருக்குக் கோல் எடுத்தியா?
ஹக்கிமா மேதார் கோல் எடுத்தானா?


சமீபத்திய நாட்களின்
விசாரிப்புக்கள் இதுவாகத்தான்
களிந்தன

மற்றவர்களுக்கு மிஹ்லார்
எங்களுக்கு மேதார்
செயினம்பு ராத்தா எப்படி?
என்தாயைப் பற்றி
உன் கேள்விகளுக்கு
என்னால் இனி
பதில் சொல்ல முடியாது

உன் அந்திமக் காலத்தின்
உனக்கும் எனக்குமான
பிரிவு
மணித்தியாலங்களுக்குள் அடங்கும்

எங்களுக்கும் அனுமதியில்லை
நீயும் சொல்லவில்லை
ஆயின்
உனது தேடல்களான
ஆயிரக்கணக்கான புத்தகங்களை
உன்னோடு அனுப்பி வைத்திருப்போம்

சமூகத்தின்
இருப்பையும் இழப்பையும்
நீ சொன்ன விதம்
பலருக்கு பாடங்களாகின



L. 13720



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் கடைசி நாட்களின்
அவசரப்படுத்தல்கள்
நீ உணர்ந்து கொண்டதை
நான் இப்பொழுதுதான் உணர்கிறேன்

"ஹக்கின்
ஹயாத்து அடங்கிவிட்டது"
வார்த்தைகளை
செவிகள் ஏற்க மறுக்கின்றன.

"ரஸூல்(ஸல்) அவர்களின்
வயதைவிட
கூடுதலாக வாழ ஆசைப்படக்கூடாது"
நீ என்னிடம் கடைசியாகச் சொன்ன வார்த்தைகளோடு
நான் நிற்கிறேன்.

**ஏ.எம்.எம். நஸீர்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹயாத்தான நினைவுகள்

அன்புத் தம்பி
நீ மறைந்தாலும்
உன் நினைவுகள் மாறாது

சின்ன வயதில்
என் கைபிடித்து நடைபயின்ற
நினைவுகள் அகலுமா
நீ
கார், ரெயில், பஸ் விட்டுத்திரிந்த
சாலைகள் சஞ்சரிக்கின்றன

நீ நடந்துபோய்
பேப்பர் எடுத்துவந்த தெருவெல்லாம்
தேடுகிறது உன்னை

உன் மென்மையான நடையை
உன் கணீரென்ற குரலைத்தேடி
என் இதயம்
பனைமரத்துக் காற்றுப்போல படபடக்கிறது

ஊசிக்காய் -
பாடசாலைக் கல்வியை விட்டுவிட்டு
ஒளிந்து ஓடிய நீ
எத்தனையோ ஊசிகளை போட்டுவிட்டாய்

ஆஸ்பத்திரி என்றாலே பதறித்துடிக்கும் நீ
எத்தனையோ ஆஸ்பத்திரிகளை
பார்த்துவிட்டாய் சகோதரனே

நம்மிட புறவளவிலே
கொய்யா, அன்னாசி, இத்தி, ஈச்சை
என பல மரங்கள்
அதில் நாம் ஏறி விளையாடுவோம்



இத்தி மரத்தின் கீழ்
குடில்கட்டி
குர்னல்சோறு ஆக்கி விளையாடுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாப்பா சாய்ந்திருக்க
மார்க்க விளக்கப் புத்தகங்களை
நீ வாசித்துக் காட்டியே
மார்க்க அறிஞனாய்ப் போனாய்

நபிகளாரின் மீலாத்விழா என்றால்
எம்முடைய வளவுக்குள்
டின்னால் பீக்கர் கட்டி
வாழைக்குடல் டீப்ளைட் போட்டு
உம்மாட ராத்தாட புடவையை எடுத்து
பந்தல் போட்டு
ஹதீஸ் மஜ்லீஸ் நடத்தினோம்
மறக்க முடியவில்லை தம்பி

நீ மிக விரைவில் செல்லவா
ஆர்வம் காட்டினாய்
இறுதியாகப் பிறந்து
முதலில் சென்றுவிட்டாய்
நினைத்துப் பார்க்க முடியவில்லை

கம்பளையிலிருந்து
உன் பன்னிரண்டாவது வயதில்
கவிதையால் கடிதம் எழுதினாய் தாயிக்கு
அதுவோ சிவப்பு மை பேனா
என்னை உடன் அழைக்க வா என்றாய்
இப்போது யாருக்கு
அழைப்பு விடுப்பாய்

உன் நண்பர்கள் பேர் சொல்லி
அவர் வந்தாரா? இவர் வந்தாரா?
என்று கேள்விகளை அடுக்குவாய்
டோபி வந்தாரா? அந்த நீல சேட்டு சாயம் போயிருக்கா?
இப்போ யார் கேட்பார் ?



உன் கதை சொல்ல
பத்து பனைமரத்து ஓலைகள் போதாது
சொல்வதற்கு முடியவில்லை
எழுதுவதற்கும் முடியவில்லை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன செய்வேன்
வார்த்தைகள் வருகிறது
பேனா தவறுகிறது தம்பி ?

வென்றவெனே போய் விட்டாய்
உன் வழியை நானும்
எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்
உன் சகோதரி

**எம்.எம். நயீமா**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கப்ரில் தொலைந்த வெண்கட்டி


என் வகுப்பறைகளில்
மாணவர்களைப் போல
உன் நினைவுகள்தான் அமர்ந்திருக்கின்றன

உன்னை
நானும்,
நமது சமூகமும்
படிக்கும் பாடப்புத்தகமாகவே
கரங்களில் எடுத்துக்கொள்கிறேன்

உன்னைப்போல்
அழகாய், அமைதியாய்
சிரிக்க முடியாமலே
என் வெண்கட்டிகள்
உடைந்து போகிறது

உன்னோடு ஒட்டியிருந்து
பல காலம் வாழ்ந்திருந்து
அதிகம் கற்றுக் கொண்ட
உன் எழுதுகோலிடம்
படிக்க வேண்டு மென்றே
என் பேனாவின் உதடுகள்
அனுமதி கேட்கிறது

உன் பிரிவால்
துடித்துப் பதறும்
உன் மனைவி மக்களுக்கு
ஆறுதல் சொல்வதற்கு
நீ, இல்லாத
அந்த உறக்கத்தின் மௌனத்திடமே
நல்ல வார்த்தைகளை
இரவலாய்க் கேட்கிறேன்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னை இழந்த
கவலை படிக்கட்டுக்களில்
உன் பலநூறு புத்தகக் கட்டுகளாய் - இன்னும்
சரிந்து விழும்
என் உம்மா வாப்பா தங்கை தம்பி
என் துணைவி அனா
எப்படி நான்
அழகாக அடிக்கி வைப்பேன்

இப்போது
குறைந்தபட்சம்
மேதார் அங்கிள்
தன் பேனாவால்
எழுதிச் செய்த
அமல்களின் பாரத்திலாவது
இன்ஷா அல்லாஹ்
மீஸான் தராசு
நன்மையின் பக்கம்
கதிக்குமென்று
என் மனைவி
என்னைத் தேற்றுகிறார்



என் வளாகத்தின்
தினவரவு இடாப்பில்
எனது பேனாவை
முந்திக்கொண்டு
கண்ணீர் ரேகைகளே
கையொப்பத்தை பதிக்கின்றன

நீ மீண்டெழாவிட்டாலும்
என் கனவுக் கப்ரில்
மீள்எழுவாய்
என்ற நம்பிக்கையுடன்...

**எம்.என்.எம். ஆஷிக்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உனக்கு என்ன தலைப்பிட...


உன் நினைவுப்பேனா
இன்னும் - என்
இதய மேசையில்தான் கிடக்கிறது
மேதார் அங்கிள்

அதனை எடுத்து
பகல் தாளிலும்
இரவு கடதாசியிலும்
உன் இழப்பின் துயரத்தையே
குறித்துக் கொள்கிறேன்

நீ சொல்லும்
மார்க்கக் கருத்துக்கள்
ஒரு கவிதைப் புத்தகத்தின்
அட்டையைப் போல
அழகாகவும் ஆழமாகவும் அல்லவா?
சிந்தனைக்கு விருந்தளிக்கும்

உன் அரசியல் விமர்சனங்கள்
அதிகம் சரியாக அமைந்து
பலரையும் பின்னர்
ஆச்சரியப்படுத்தும் - அந்த
ஆற்றலும் அநுமானமும்
நீ தீர்மானித்ததா?
அல்ல
உனது பேரின்
பின்னாலுள்ள (ஹக்)
அந்த உண்மை தீர்மானித்ததா?

நீ - இன்னும் இருந்திருந்தால்
இதற்கும் - நான்
சரியான விடையை தெரிந்திருப்பேன்



**யூ.கே. பஸ்மியா**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இசை மறைந்த பாடல்

நூறுல்ஹக் என்ற நாமத்தை
பண்டிதர் முதல் பாமரர் வரை
ஆசை கொண்டதால் தானோ
இஸ்ராயிலும் ஆசைப்பட்டார்

நான் பொய் சொல்லவில்லை
மௌலவிமார்களிடம்
மார்க்க விளக்கங்களை
கேட்பதைவிட
உன்னிடம் கேட்டால்
அதுவே சரியாக இருக்கும்


உன்னைச் சுற்றி
எப்போதும் பலர் இருப்பர்
சமூக அரசியல்
உன் ஆக்கங்களாக கருத்தரித்தன

உன்னிடம் கேட்கப்படும்
கேள்விகளுக்கு பதிலும் ஒரு
கேள்வியாகவே இருக்கும்
அதில் பதில் மறைந்திருக்கும்

நான் உண்மை பகருகிறேன்
எமது சமூதாயம்
ஒரு சமூக விஞ்ஞானியை இழந்திருக்கிறது

PUBLIC LIBRARY
MARUTHAMUNAI
MUNICIPAL COUNCIL
KALMUNAI
LENDING SECTION

**ஆசிரியை யூ.கே. ஜெஸ்மீன் முஹம்மது அன்சார்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹக்

முகம் பிரகாசித்திருந்தது
உதிர்ந்த ஒளியிலும்

கபன் சீலை இரத்தத்தால் தோய்ந்திருந்தது
புலப்படாத நிறம்
ஒவ்வொரு எழுத்தும் ஸஹீதுகள்

கபனிடப்படாத எழுத்துக்களை
சுமந்த கரங்கள்


குளிப்பாட்டத் தேவையில்லை
இவ்வெழுத்துக்களை
ஒளியை கழுவமுடியுமா

நேற்று வரை போராடிய
கூரிய அறிவாள்
கப்ர் உறைக்குள் மடக்கிக் கொண்டது

நீதி நேர்மை உண்மை
ஒன்று சேர்ந்த எழுத்துலகம்
தன் சுற்றுகையை நிறுத்திக்கொண்டு
மௌன இருப்புக்குள் அடங்கிக்கொண்டது

நேரிய பாதையில்
போராடிய தேடல்கள்
சுவர்க்கத்தின் மகரந்தங்கள்

காதில் விழுந்த ஆதி வாசகம்
நூறுல்ஹக்
மீஸான் கட்டைவரை நிலைத்திருந்தது
விலைபோகாத கொள்கை
கடந்து போகாமல்
காலத்தின் இதயத்துடிப்பின் ஒலியானது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரப்பப்பட முடியாத வெற்றிடம்
வரிசையாக அணியாக பலபேர் இருந்தும்

குருட்டு அறிவுக்கு கண் வைத்த ஒளி
முதுகைக் கொடுத்து சமூகத்தை ஏந்திய
நறுமணப் பூக்கள்
வறுமைக்குள்ளும் செம்மையான எழுத்து

பிறை உறைக்குள்
உருவிய பௌர்ணமி
தாகம் தீர
இருளை கொன்று தீர்த்தது
ஈமானிய பேரொளிகள்
நாளை ம.்.ஸரின்
சூரிய வெப்பத்தையும்
சுட்டெரிக்கும் நிழல்கள்

ஒரு பேனாவை மஞ்சுப் பலகைக்குள்
அடைத்தபோது
அதன் எழுத்துக்களெல்லாம்
அடக்கம் செய்யப்பட்டன
இதயத்துக்குள்

ஒளியொன்று தோன்றி மறைந்தது
அது ஏற்படுத்திய வீச்சுக்கள் எம்மாத்திரம்

ஏ.எம்.எம். ஜாபீர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Google

காக்கா
மார்க்கத்தில இதப்பற்றி
என்ன காக்கா சொல்லிருக்கு
அது மனே
நபி(ஸல்) அவர்கள்
இப்படித்தான் கூறி இருக்காங்க
இதன்படி செய்தால்
எந்தப் பிரச்சினையும் இல்ல


மீண்டும்....
இதப்பற்றி இந்தப்புத்தகத்திலே
இத்தனையாவது பக்கத்தில இருக்கு
அத பார்த்து சொல்லுறேன் மனே

எம்மட ஊருக்கு
பிரதேசசபை கொடுக்கிறதற்கு
என்ன காக்கா இவனுகளுக்கு பொறுப்பாயிருக்கு
மனே நான் எழுதின ஒரு புத்தகம் தாரேன் பாரு
அதுல எல்லா கேள்விக்கும் பதிலிருக்கு

நம்மட ஊரு
இந்த தேர்தலிலே
எதற்கு காக்கா வாக்களித்தால் நெல்லம்
அது மனே
இப்போது இருக்கும் அரசியல் நிலவரப்படி
இதற்கு வாக்களிப்பதுதான் நமக்கு நல்லது
சரி காக்கா

இந்த கேள்விகளும் வினாக்களும்
வெற்றிடமாக இப்போதும் கிடக்கிறது
கண்ணீரோடும்...
உன் நினைவுகளோடும்...

யா அல்லாஹ்
என் காக்காவின் பாவத்தை மன்னித்து
உயர்ந்த சுவர்க்கத்தை வழங்குவாயாக




ஹஸீனா ஸஹுர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுவர்க்கத்து மலர்களால் ஒரு புத்தகம்

என் வாசலின்
பூச்செடி கொடிகளின்
நலன்களையும் விசாரிப்பாய்
சிலவேளைகளில்
அதற்கும்
அறிவுரையும் வழங்குவாய்
அதனால்தானோ?
இப்போது அவை
உன்னை நினைத்து
வண்டுகளிடம் புலம்புகிறது



உன் பேச்சிலும்
நம் மொழியின்
சரியான உச்சரிப்புக்களே
இதனால்தானோ
உனது குரலை கேட்பதற்கு
என் நீர்த்தொட்டியின்
மீன்களும் ஆசைப்பட்டு துடிக்கிறது

நீ எழுதி
மைமுடிந்து வீசிய
உன் பேனா சுள்ளிகளை
பறவைகள் எடுத்துச் சென்று
தன் கூட்டில் செருகிவைத்து
அதன் குஞ்சுகளிடம்
கதை சொல்லி அல்லவா பதறுகிறது

அடிவானமென்ன
நீ எழுதிய கவிதையின் சொந்தமா
ரஜப் மாதத்தின் - (உனது 20ஆம் நாள்)
தலைப்பிறையும்
உனக்காய் கையேந்தி பிரார்த்தித்தது
இவைகளால் தானோ?
நிலா கடல் புத்தகங்கள் எல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூறுல்ஹக் என்ற
உன்நாமத்தை சூட்டும்படி
அலைகள் ஆர்ப்பாட்டம் செய்கிறது

நீ மனித இனத்திற்கு மட்டுமல்ல
செடி கொடி வானம் கடல்
பறவைகளுக்கும் மீன்களுக்கும்
பிரியமானவன் என்பதால்த்தான்
இன்ஷா அல்லாஹ்
உன்னை இப்போது
சுபனபதிக்கும் பிடித்துவிட்டது

உன் கப்ரில்
சுவர்க்கத்தின் பூக்கள்
புத்தகங்களாக பூக்கட்டும்
நீ வாசிப்பதற்கு

**அய்த்சாதின்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரிந்து போகாத துயர்

பள்ளிப் படிப்போ
மூன்று ஆண்டுகள் தான்
உன் எழுத்தின் ஆளுமையோ
பேராசிரியருக்கு நிகர்
அதிலும் ஒருபடி மேல்

உன் ஆய்வின் தேடல்
ஆச்சரியப்படுத்துகிறது
உன் கட்டுரையின் கனதி
கதிகலங்கச் செய்கிறது

நீ
வரலாற்றுக்குள் முத்தெடுக்க மூழ்கியவன்
முஹம்மது முத்துவின் செல்ல மகன்


பத்திரிகைகளை சேர்த்து வைப்பதில்
பத்திரமானவர்
பாத்துமாவின் புத்தாக்கமகன்

உன் புகழ்பாடும்
ஊடகங்களில் ஊறிப்போனவன் - நான்
உறங்காமல் உன் அரசியல் பேச்சை
அசைபோடுபவன் - நான்

LENDING SECTION
PUBLIC LIBRARY
MARUTHAMUNAI
MUNICIPAL COUNCIL
KALMUNAI

கடைசிவரை
உன்னோடு இல்லாததை
நினைத்து ஏங்குபவன் - நான்

சாய்ந்தமருது
உன் உடலை
சுமக்காததை நினைத்து
சுதாகரித்துக்கொண்டவன் - நான்



உன் மறுமை வாழ்வுக்காய்
இக்கவிக்கரம் ஏந்தி
பிரார்த்திக்கிறேன்

**எம்.எஸ்.எம்.றின்ஸான் (இவ்ஹாம்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத்தின் ஹக்



நீண்ட உறவின் தூரம்
பின்னோக்கிப் பார்க்கையில்
எத்தனை பயணங்கள்
எத்தனை பேச்சுக்கள்
எவ்வகை எழுத்துக்கள்
எவ்வாறான வாதங்கள்
எல்லாம் நினைவுகளாய் சுவடுகளாய்
எழுந்து நிற்க
எதை எழுதி எப்படி முடிப்பது

ஏற்றுக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை
என்ற இறை நியதியில் ஹக்கின் இழப்பும்
பதிவாகிப் போனது

அவர் விட்ட இடத்திலிருந்து
அவர் தொட்ட விடயங்களிலிருந்து
தொடங்க வேண்டிய பொறுப்புக்களை
ஈடுசெய்வதில் உறவின் பயனை உணர்கின்றேன்

உயிருக்கு அஞ்சாத போர்வீரனாய்
எழுதுகோலை தன் ஆயுதமாய் ஏந்தி நின்று
எழுத்தின் ஹக்காய் ஹக் செய்த பணியின் உச்சம்
சமூகத்தின் எல்லையில் இன்றும் காவல் நிற்கிறது

உறுதியும் நேர்மையும் கொண்ட குணத்தால்
தன் எழுதுகோலை எப்போதும்
தலைநிமிரச் செய்தே அவர் வைத்திருந்தார்
தலைகுனியும்படி அவரும் அவர் எழுதுகோலும்
எழுந்ததுமில்லை எழுதியதுமில்லை

சமூக இருப்பின் வரலாற்றை அதன் பூர்வீகத்தை
தன் எழுத்தால் பத்திரப்படுத்திய சமூகப் புனிதன்
சமூக இழப்பை அவலத்தை
உரத்துக் கூறி நீதி தேடிய எழுத்து மனிதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஹக்கின் சிந்தனைகள் சுயநலமற்றவை
ஹக்கின் கருத்துக்கள் சமூக நலன் மிக்கவை
ஹக்கின் எழுத்துக்கள் யாருக்கும் முதுகு சொறியாது
ஹக்கின் பேச்சுக்கள் யாரையும் போலியாய் ஏற்காது
ஹக்கின் வாதத்தில் ஹக் இருக்கும்
எழுத்தின் ஹக் நூறுல்ஹக்

ஏழ்மையும் எளிமையும் கொண்டு
தேடலும் ஆவணமும் சுமந்து
ஆய்வுகளும் ஆதாரங்களும் சேர்த்து
முன்உதாரணமாய் மிகச் சாதாரணமாய் வாழ்ந்த
உண்மையின் ஒளி ஹக்

மார்க்கத் தெளிவில் குர்ஆனும் ஹதீஸும் முன்நிற்க
மாசற எடுத்துக்கூறி ஆதாரம் உரைப்பவர்
மார்க்கத்திற்கும் சமூகத்திற்கும் பிழையாய்
மன்றத்தில் யார் பேசினாலும்
முடிந்தவரை முகத்தில் அதற்கு மாற்றுக் கருத்துப் பேசி
முரண்பாடில்லாத வாதங்கள் புரிபவர்
மார்க்கத்தையும் சமூகத்தையும் விட்டுக்கொடுக்காது
மகத்துவம் நிலைக்க மாண்புகள் செய்தவர்

எடுத்துக்கூறி ஒவ்வொன்றாய் எழுதி முடிக்க
ஏடு போதாது
எங்கள் உறவும் நட்பும்
எழுத்தில் அடங்காது
இன்னும் அவரின் இடைவெளியில்
நான் வெறுமையாக நிற்கிறேன்

**நவாஸ் சௌபி**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீ வாசிக்கும் லௌஹுல் ம..பூல் பலகை

கப்பலேறிக் கற்றவர்கள் எல்லாம்
காணாமல் போன இம் மண்ணில்
ஐந்துபடி மட்டும் கற்ற உனக்கு
இத்தனை கொள்ளை அறிவா

சிலிர்க்கிறது நெஞ்சம் உன்னை நினைத்து
உன் அலுமாரி அடுக்குக் காகிதங்கள்
கண்ணீரை புழுதியாய் சொரிகின்றன
உன்னை நினைத்து

என்னை இரவு முழுவதும் இறுகப்பிடித்து
வைத்திருக்கும் என் அன்பாளன்
எங்கே என்று அழுகிறது உன் பேனா
உன்னை நினைத்து

எங்களோடு இரவு முழுவதும்
பேசிக்கொண்டிருக்கும் இதய நேசன்
எங்கே என்று அழுகிறது
உன் புத்தகங்களும் உன்பத்திரிகைகளும்
உன்னை நினைத்து

எங்களோடு உரத்து உரையாடிய குரல்
எங்கே என்று அழுகிறது உன் சொந்தங்கள்
உன்னை நினைத்து




இதற்கெல்லாம் ஆறுதல் தானோ
தினத்தந்திகளில் தினமும் தவழ்ந்து
வருகிறது உன் நினைவலைகள்
உன்னை நினைத்து

நீ அறிவில் மேதையாய் இருந்ததால்தானோ
உன்னை மேதார்(மிஹ்லார்) என்று அழைத்தார்கள்

நீ உண்மைகளை வெளிச்சம் போட்டு காட்டியதால்தானோ
உன்னை நூறுல்ஹக் என்று அழைத்தார்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணறைக்குள்ளும் படிப்பதற்கொரு
நூல் நிச்சயம் எடுத்துச் சென்றிருப்பாய்
இல்லையேல் லௌஹுல் மஃபூல் பலகையையாவது
நீ படித்துக்கொண்டுதான் இருப்பாய்

என் பேனாகூட விட்டுவிட்டு எழுதுகிறது
உன்னை நினைத்து
ஏனென்றால் பேனாக்களுக்கும்
பிடித்தவன் நீ
உன்னை நினைத்து

**றொபினா நபீல்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கிய வானில்
நிலா வம்சத்தின்
விலாசம் மறைந்து
போனதா......

ஒலியும் ஒளியும்
நேர்கோட்டில்
சந்தித்துகொண்ட
ஒரு அற்புத
ஆளுமையின்
துயில் அடங்கி போவதா....

நைல்நதியாக
பெருக்கெடுக்கும்
பேராண்மை ஆற்றலின்
சுவாசிப்பை...இலக்கிய
நேசிப்புகள்
இழந்து போனதா..

மறைந்தாலும் மறவாத
உயிர் எழுத்துக்களும்
மெய் எழுத்துக்களும் - இன்னும்
அடக்கப்படவில்லை
நீங்களும் பேசுவீர்கள்...
நானும் பேசுவேன்...
நூறுல்ஹக் என்ற
நட்சத்திரத்தை...
இலக்கியவானம் - என்றுமே
மறக்காது...



பாத்திமா நளீரா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்கு மாகாண வித்தகர்

25.01.2021ஆம் திகதி திங்கட்கிழமை
இறையடி சேர்ந்த நூறுல்ஹக்
இரக்கம் கொண்ட
எம்மை எல்லாம்
விட்டு விட்டு பிரியா
விடை பெற்று சென்றுள்ளார்.

சாய்ந்தமருதை பிறப்பிடமாகவும்
மனைவியின் ஊரான கொழும்பு
ஹுனுப்பிட்டியை இருப்பிடமாகவும்
மகளின் ஊரான ஏறாவூரை
இறப்பிடமாகவும் கொண்டவர்
இன்று மீளாத்துகில்
கொண்டுள்ளார்.



சென்ற வழியை
திரும்பிப் பார்த்தால்
சென்ற இடமே தெரியவில்லை
கவியே என்னுயிர் என்று
கலங்குகின்றேன்
கடைசி வழிதான் இது.

பல இன மக்களாலும்
பாராட்டப்பட்டவர் இன்று
மண்ணுலகை விட்டும்
விண்ணுலகம் சென்றுள்ளார்
கொடுத்தவனே எடுத்துக் கொண்டான்
யார் யாரைக் குறை கூறுவது

காண்பதெல்லாம் உன் உருவம்
கேட்பதெல்லாம் உனது குரல்
காலமெல்லாம் காத்திருந்தாலும்
காலத்தால் அழியாதது உன் நாமம்
மல்லிகைத் தோட்டத்தில் பூ மலரும் ஆனால்
மாண்டார் வருவாரோ இம் மாநிலத்தில்

**ஆசிரியை எம்.எஸ்.ஹமீதா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உனக்குள் அசையும் மொழி

நெஞ்சு நிமிர்த்தி நீ
முன் செல்லும் திராணியே
எனக்கு எப்போதும் பிடிக்கும் :


"மிஹ்லார்" என்னும்
உன் நாமம் தான் இன்னும் எனக்குள்
அமிழ்ந்து கிடக்கிறது :

மரணத்துள் வாழ்ந்து கொண்டுதான்
நீ எழுத்துக்களோடு
கைகோர்த்து நடந்திருக்கிறாய் :

அங்குலம் அங்குலமாய்
மனித நேயத்தை நீ அப்போது
வரம்பு கட்டிக் கொண்டிருந்தாய் :

மொழிக்கு ராகம் இணைக்கும்
தெவிட்டாத பக்குவத்தை
எங்ஙனம் நீ
கற்றுக் கொண்டாய் :

உன் விரல் இடுக்குகளில்
தவழ்ந்த புத்தகங்களில்
நான் சாய்மணை போட்டு
வாசிப்பு ரசனைக்குள்
காணாமல் போயிருக்கிறேன் :



கைபேசியின் மறுமுனையில்
கனத்த அர்த்தப்பாடுகளோடு
என்னை நீ சுவாரஸ்யப்படுத்துவாய் :

மரணத்தின் அஜலை நீ
பொருந்திக் கொண்டாலும்
உனதின் பெறுமான எழுத்துக்கள்
என்னை வழி மறித்துக் கொண்டே
கடந்து செல்கின்றன :
அவை உனக்குள் அசையும் மொழிதான்!

மருதமுனை விஜிலி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எழுத்தில் பிரகாசித்த ஊடகவியலாளர் நூறுல்ஹக்**
**மண்ணறையில் ஓய்வடைகிறார்**

இன்று மண்ணறையில் இருந்தாலும்
என்றும் நெஞ்சறையில்
வாழ்ந்து கொண்டிருக்கும்
உங்கள் நினைவுகள்...


வாழும் காலமெல்லாம்
தன் எழுத்துக்களை பத்திரிகையிலும் பல நூல்களிலும்
பொதித்த அறிஞரை இழந்து நிற்கையில்
பேனாக்களும் புத்தகங்களும் உணர்வற்றுக் கிடக்கின்றன

அறிவிற்கோர் உதாரணம்
மிச்சமாய் உங்களது பேச்சுக்கள்
உதிர்த்ததில்லை
ஆனால் பேசினால் அவை ஒவ்வொன்றிலும்
ஒரு தேடலின் பொக்கிஷங்கள்
விடைகளாக உணர்த்திக் காட்டிருக்கும்

L.13720

முகமதில் கொண்ட எளிய புன்னகை
அகமதில் கொண்ட நற்சிந்தனை
எழுதி பாதுகாக்க வேண்டிய
அவர் மீதான கல்பெழுத்துக்கள்

தன் வீட்டை குட்டி நூலகமாக்கி
அதில் பல ஏட்டுச் சுடர்களை ஒளியேற்றி
அறிவின் தாகத்தால் நிரம்பிய அறிஞரே



இறைவனின் இறையருளிலும்
நபியின் போதனையிலும்
உறுதியாய் நின்று
இறையடி சேர்ந்த மேதை
மறுமையிலும் வெற்றியடைய
பிரார்த்திக்கும் கரங்களோடு இணைகிறேன்

**இப்றாஹிம் முஹம்மது அஜ்வத்**
**தென்கிழக்கு பல்கலைக்கழகம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசிப்பால் தன்னை வளர்த்துக் கொண்டவன்

பொன்னை விரும்பாமல்
புகழை விரும்பாமல்
தன்னை விலைபேசும்
தலைமைகளை விரும்பாமல்
கொள்கைகளை
விட்டுக்கொடுக்காத பக்குவத்தில்
நேற்றுவரை எம்மோடு
நெருங்கி இருந்துவிட்டு
இறைவன் புறத்தே ஏகினான்
நூறுல்ஹக்

சிரேஷ்ட ஊடகவியலாளராக
சிறப்புப் பெற்றவர்
அரசியல், இலக்கியம், ஆன்மீகம் என்று
தெளிவான பாதையை தெரிவு செய்து
எழுத்துக்களை அதன்பால்
எடுத்துச் சென்றவன்

பஞ்சு மேகங்கள் கொஞ்சி விளையாடும்
மலைஉச்சி
புழுதி மணக்கும் மலையடிவாரம்
இவற்றுக்கிடையேதான்
இவரின் எழுத்துக்கள்
வாரோட்டம் ஓடி வாழ்ந்து மகிழ்ந்தன

இவன் பேனாமுனையில்
சுதந்திரம் பூத்துக்கிடந்தது
அதனால்தான்
தமிழ் தேசிய பத்திரிகைகளின் பக்கங்கள்
அவனின் கட்டுரைக்காகக் காத்துக்கிடந்தது.

இவன் எதையும்
தெளிவாக புரிந்துகொண்டான்
வாசகனோ வயது வேறுபாடின்றி
அவன் எழுத்துக்களை
வாசித்து மகிழக் கற்றுக்கொண்டான்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் எட்டு நூல்கள்
மட்டுமே எழுதினான்
ஆனால்
பன்னூலாசிரியர் என்றே
பலராலும் அழைக்கப்பட்டான்

முஸ்லிம் அரசியல் இயலாமையை
புத்தகம் போட்டு
பிரசித்தம் செய்தவன்
அதன் ஊடாக
தன் கருத்துக்களை
ஒளிவுமறைவின்றி
எவருக்கும் அஞ்சாமல்
மழையாய் பெய்தவன்

கலாபூஷணம் விருதுக்கு
காத்துக் கிடக்காமல்
வித்தகர் விருதோடு
விடைபெற்றான்
நூறுல்ஹக்

அவரின் மறுமை சிறப்புக்கு
எல்லோரும் சேர்ந்து
இருகை ஏந்துவோம்

**கலாபூஷணம் ஏ. பீர்முஹம்மட்**

(இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையில் கவிதா சாளரம் பகுதியில் மர்ஹூம் எம்.எம்.எம். நூறுல்ஹக் அவர்கள் தொடர்பாக 13.02.2021இல் என்னால் வாசிக்கப்பட்ட கவிதை இது)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெய்யொளி

"வாளின் கூர்மையைவிட
பேனாவின் கூர்மை வலிமையானது"
என்பதை மெய்ப்படுத்திய மெய்யொளி

எதிராளியின் கருத்திலும்
நியாயமிருந்தால் ஏற்றுக்கொள்ளும்
நேர்மையான போக்காளன்
உன் நிலையறிந்தே
அபாபீல்கள் கவிதா வட்டம்
காதிபுல்ஹுதா - நேரிய எழுத்தாளன்
என்று பட்டம் சூட்டியதோ!

அந்திம காலத்தில் அரசியல் கலந்துரையாடல்
நமக்குள் அதிகம் எழுந்தது
போட்டிக்கு போட்டியாக
உரத்த குரலில்
இருவரும் பேசிக்கொள்ளும் சப்தம்
இன்று
நிசப்தமாக விரிந்துகிடக்கிறது
அதில் நான் சுருண்டு கிடக்கிறேன்



நீ
என் காக்காவானாலும்
நண்பராகவே உன்னோடு பழகிக்கொண்டேன்

என் விளை நிலத்தில்
உனக்காகவும் ஒரு பங்கு
அறுவடை செய்கிறேன்

உண்மையில்
நீ முந்திக்கொண்டாய்
நாங்கள் பிந்திக்கொண்டோம்
இவ்வளவுதான்
நமக்குள் விரிசல்
இன்ஷா அல்லாஹ்
நாளை சந்திப்போம்.

ஏ.எம்.நியாஸ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தகங்களால் புன்னகைக்கும் நூறுல்ஹக்


நூறுல்ஹக் உனக்கு சொந்தமா?
நண்பர்கள் வியப்புக்குறிகளை
விதைக்கும் போது
சந்தோச அறுவடையை
செய்து கொள்ளும் என் கல்பு.

மார்க்கத்தில்
முரண்பட்ட கொள்கைகள்
என்செவிவழி வந்து
மனம்புரவி திசைமாறும் போதெல்லாம்
கடிவாளம் இட்டு நிறுத்தியவர்.

அரசியல் மைதானத்தில்
எம் சமூக வீரர்களின்
அஞ்சலோட்ட விளையாட்டை
அச்சமின்றி சொன்னது
உன்பேனா!

புத்தகங்களின் நடுவே
புன்சிரிப்புடன் பார்த்து
ரசித்த எனக்கு
அதே சிரிப்பை
ஏறாவூரிலும் பார்த்தேன்

**எம்.எச்.எம். நஜாயித் ஸதீல்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## மருதூரின் மாணிக்கம்

அகவை அறுபதை எட்டுமுன்
அல்லாஹுவின் அழைப்பை
அங்கீகரித்து அவனியை விட்டு
ஆகிறாவில் அவதரித்தவன் - நீ

'நூறுல்ஹக்' ஆகவிருந்து
அறியாமை சமூகத்திற்கு
அறிவொளியூட்டி
மருதூரின் புகழை அகிலமெங்கும்
மலரச் செய்தவன் - நீ

எட்ட முடியாத தூரத்தில் - நீ
இருந்தாலும்
உன் படைப்புக்கள் ஒவ்வொன்றும்
எம்மையும் எழுதத்தூண்டிக்
கொண்டிருக்கிறது.

உலக ஜன வெள்ளத்தில்
கரைந்து விடாமலும்
காணாமல் போகாமலும்
கருத்துக்கள் சொல்ல
துணிந்து நின்ற
உன் ஆளுமையை
இன்றும் நான் வியக்கிறேன்.



கொள்கைகள் சில
முரண்பட்டாலும்
நமக்கான கருத்தாடல்களின் போது
உன்னிடம் இருந்து - நான்
கற்றுக் கொண்டவைகள் ஏராளம்

கிடைக்காதென ஒதுக்கிய
பழைய அரிய புத்தகங்களும்
பத்திரிகைகளும் புத்தம் புதிதாய்
பூத்திருந்தன உன் பூங்காவனத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ யொரு சராசரி சாதாரணமல்ல
பாறைகளின் இடுக்கில் முளைத்த
இதிகாசம்

சமூகத்திற்கான இருப்புத் தேடலில்
உன் வாழ்வின் பல அடுக்குகளை
நீ இழந்திருக்கிறாய்
மீண்டும் வாழ
வாய்ப்பில்லை என அறிந்தும்

உன் போன்றவர்களின்
வயதுகள் இவ்வுலகில்
வரையறுக்கப்பட்டிருந்தாலும் - உன்
ஆத்மார்த்தமான படைப்புகள்
காலத்தை எல்லாம் வென்று
நிற்கும்.

காற்புள்ளி போட்டு தொடரப்பட
வேண்டிய உன் வாழ்க்கை
முற்றுப்புள்ளி வைக்கப்பட்டதை
நினைத்து நிதமும் கலங்கி
நிற்கின்றோம்
உன்போல்
யாருமில்லையே என்று.



எம் நினைவகங்களில்
சேமிக்கப்பட்டிருக்கும் உம்மைப்
பற்றிய நினைவலைகள்
கிகாபைட்கள் தாண்டிச் செல்கிறது.

எம் பிரார்த்தனையெல்லாம்
மகத்தான மறுமை வாழ்வினைப் பெற்று ஜன்னத்துல்
பிர்தௌஸில்
நீ நிரந்தரமாக வேண்டும் என்பதே

**திருமதி ஆசிரியை ஏ.சி. நஜீமா பௌஸுல் சஜ்ஜாத்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விரைந்து சென்றதேனோ...!

ஹிதாயா , மருதூர் மஜீட்சேர்
இழப்பு மறைவதற்குள்
இன்னுமொரு சூரியன் அஸ்தமனமானது!

ஆன்மீகம், விமர்சனம், இலக்கியம்
உனக்கு அத்துப்படி
உன்பேச்சு உன்வாழ்வு
அத்தனையும் விசித்திரமாய் இருந்தது

வித்தகர் விருது கிடைத்து
விந்தை செய் நிலையில்
விண்ணுலகு நோக்கி விரைந்து சென்றதேனோ!

பேச்சாலும் பிற ஆற்றலாலும்
புடைசூழ்ந்து புகழ்பரப்பினாய்
புத்தகங்கள் எழுதி
புரட்சிசெய்தாய்
உன்பிரிவு
சாய்ந்தமருதுக்கு மாத்திரமல்ல
சரித்திரம் படைத்த
எழுத்துலகுக்கு மாபெரிய இழப்பு தானே!



உன்குறை நாம் காணவில்லை
குற்றால அருவிபோல் குவிகிறதுனக்கு
இரங்கல்கள்
வாழும்போது அமைதியாய் நடைபயின்று
மறையும்போதும் அதைத்தான் கண்டாய்!

நாணயத்தின் இருபக்கம்போல்
நாலா பக்கமும்
உனக்கு நண்பர்கள்
நல்லடியார் கூட்டத்தில் சேர
நாயனிடம் கை ஏந்துகிறேன்.

**தோப்பூர். எஸ். சிறாஜுதீன்**
**நற்பட்டிமுனை**
**(விடிவெள்ளி 29.01.2021)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுவனமேகுவாயாக.......

நீ எழுத்துக்களால்
எழுந்தருளப்பட்டவனா?....

உனது பக்கவாட்டில்,
படுக்கையறையில்,
பார்வைகளில்,
பயணங்களில் என்று
எல்லாவற்றிலும்
எழுத்துக்களே சுற்றியிருந்தன

உனது
ஜன்னல் கதவுகளூடாக கசிந்த
வாசிப்பின் வாசம்
எங்களை
சுவாசிக்க வைத்ததால்
நாங்களும்
பேனை வாங்கினோம்....

தர்க்கத்திலும் தரீக்கத்திலும்
தலைநிமிர்த்திய தத்துவஞானி,
நீ மருதூரின்
மகுடம் மட்டுமல்ல,
ஊரின் உயிரெழுத்தும்தான்...

உன் புன்சிரிப்பில்
மெய்யொளிர்ந்தது
கோபத்தில்
கொள்கை தெரிந்தது,
ஆர்வத்தால்
ஆய்வு தொடர்ந்தது
மொத்தத்தில் நீ
முத்தின் முகவரியானாய்.....






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூறுல்ஹக்
நீ நூலகம்...
உனது
ஆவண அடுக்குகளில்
நாங்கள்
அடையாளத் துண்டுகள்....

நீ சாய்ந்தமருதின் சரித்திரப்
பேனை,
சாந்தி மார்க்கத்தின்
சலவாத்து மாலை....

உனது இழப்பால்
துயருறுகிறோம்,
உனது எழுத்துகளால்
இறக்கை செய்கிறோம்,
துஆக்களால்
தூது விடுகிறோம்,
வலிகள் வழிகாட்ட
நீ சுவனமேகுவாயாக....

மாளிகா அஸ்ஹர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெய்யொளி ஒன்று மெய் மறைந்தது...

தீய்க்கின்ற கண் கொண்டு
ஆர்க்கின்ற சொற்கொண்டு
ஆர்க்கேனும் அஞ்சாத
போர்க்குணம் கைக்கொண்டு
நூறுல் ஹக்கென்ற பேர்கொண்டு
நமக்கென்று
ஒலிக்கின்ற குரலொன்று ஓய்ந்தது
பார்...

சீர்கெட்டுப் போகட்டும் சமூகமென
மார்தட்டும் பேர்கட்கு எதிராக
உளிதீட்டிக் கூர்கொண்ட அவன்
பேனா
திக்கெட்டும் பரவட்டும் என்றிருக்க
இலக்கணம் பிரிந்து சென்றதேனோ...

நெடுநிலக் குடியேற்றம் சுடுதணல்
வெளியேற்றம்
வடநிலப்பெருஞ்சமர் தொடர் நிலப்
போரியல்
தருமிடர் துயரெல்லாம் - கற்றாய்ந்து
தொடர்பல தொகுத்தவன்
போனதெங்கே...

பாராளச் சென்ற போராளர்
நிலையை ஊராள வந்த பேராளப் பேய்களை
ஓராளாய்த் தனி நின்று
ஓர்மையுடன்
வீறான எழுத்தாலே விளாசி நின்ற
பேராளும் எழுத்தாளன்
நூறுல்ஹக்கே - நீளம்மை
மீளாத துயரத்தில்
ஆழ்த்தினாய் .... ஆ.....



**தீரன். ஆர்.எம். நௌஷாத்**
**செயற்சபை முதல்வர்**
**சாய்ந்தமருது அபாபீல்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத்தை விற்காத நூறுல்ஹக்

எனக்கோர் - ஆசானாய்
எப்போதும் வழிகாட்டினாய்
எளிமையாக பழகி உள்ளார்ந்த உறவாக
பழகிய காலம்
என் மனதில் விட்டுச் செல்லவில்லை - இன்னும்

உள்ளதை உள்ளபடி உரத்துச் சொல்லும்
உன்னதமான உயர்திணை எழுதுகோள் - நீ

மனதில் பட்டதை மனப்பக்குவமாக
எடுத்துரைக்கும் இயல்பான குணம்
உன்னில் கண்டவைகளில் முதலிடம்

சூபிஸ கொள்கையில் உறுதியாய்
சூபிஸ மகான்களை நேசித்து
நேர்வழி கொள்கையில் வாழ்ந்து
நேர்த்தியுடன் வாழ்ந்து காட்டினாய்

தரம் மூன்றில் கற்றாலும்
படித்தோர்களும் பட்டம் பெற்றவர்களும்
அரசியல் வாதிகளும் உன்னிடம் கற்றுக் கொண்ட
பல்துறை கல்வியை
கண்ணுறக் கண்டு வியந்தேன் - அன்று

ஊடகத்துறையை உண்மையாக நேசித்து
ஊடக உலகிற்கு உதாரணமாக திகழ்ந்த
எழுத்தை விற்காத நூறுல்ஹக்



அகிலத்தை படைத்த
அல்லாஹ்வை சுஜூது செய்து
அண்ணலார் நபிகளாரின் பொருட்டால்
நல்லோர்களின் நாமம் கொண்டு
பிரார்த்திக்கின்றேன் - உனக்காக
உயர்ந்த - சுவர்க்கத்திற்காக

உ.லெ. றியாழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பன்னூல் ஆசிரியர் நூறுல்ஹக்**

முஹம்மது முத்து மௌலவிக்கும்
முத்துவின் துணைவியார் பாத்திமாவுக்கும்
இளைய மகனாய் பிறந்தவர் -
25.01.2021இல் இவ்வுலகை விட்டு பிரிந்துவிட்டார்

ஆறாத் துயர் கொண்ட உள்ளங்கள்
அங்கலாய்த்து அசை மீட்கின்றன
சொந்த பந்தங்கள் மனம் உடைந்து
சுக்குநூறாக துடிக்கின்றன.

பலராலும் பாராட்டப்பட்டு
பட்டம் பெற்றவர் இன்று
பட்டத்தைச் சுமந்தவாறு
பரலோகம் சென்றுள்ளார்.

முற்றத்து மல்லிகை மணப்பதுபோல்
முத்தான ஹக்குவின் ஆத்மா
சுவனம் அடை ஆண்டவன்
நல்லருள் புரிவானாக

**ஏ.எச்.எம். ஹலீம் அக்மல்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரவு தேடும் விடியல்


எழுத்தாயிதம் கொண்டு
நிதர்சனம்
யுத்தம் புரிந்த
ஒரு சமூக வீரன் சமாதியானான்

சமூக வயல்களில்
உண்மை விதைளை
பயிரிட்ட கட்டுரை விவசாயி
காணாமல் போனான்

நாளைய தாகத்திற்கு
நேற்று தண்ணீர் வழங்கியவன்
இன்று இல்லை

சமூகத்திற்காக
இவன் எதைத்தான் எழுதவில்லை
எனவேதான்
பெருவிருட்சமாக
எமக்கு நிழல் பரப்பி நிற்கின்றான்.

**செல்வி யூ.கே. றின்ஸாப்f (B.A)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுவனம் சொந்தமாக

எந்தன் அன்பு உயிர்த் தோழி
கவிதாயினி கமர்ஜானைக்
கரம் சேர்த்த கவிச்செல்வன்!

பன்னூலால் புகழ் ஓங்கி
பார் ஜொலித்த நல்வைரம்!
பிறர் நலமே தன்னலமாய்
பேணி வாழ்ந்த பெருந்தொண்டர்!

நாமறிந்த நன்னூலார் நற்கலைஞர்
மர்ஹூம் நூறுல்ஹக்
பல்லின மக்களுக்கும்
சொல்லினால் கூடமைத்து
சிக்கலின்றி தீர்வு கண்ட
திறன்மிக்க ஊடகவியலாளர்

மறைந்தும் மறையாத
மாண்புமிக்க தன் நாமம்
நீங்காமல் நிலைத்திருக்க

மக்கள் மனங்களிலே
மறக்காமல் பதித்துச் சென்ற
மாமனிதர் மர்ஹூம் நூறுல்ஹக்



வாழும் காலங்களில்
ஏதும் பிழை செய்திருந்தால்
வல்லநாயன் அல்லாஹ்
அன்னாரை மன்னித்து
அருள்புரிவானாக!

மேலான சுவனமதை பரிசாக
அளிப்பானாக! ஆமீன்.

**இராணி பௌசியா**
**கல்லளை**
**பொலன்னறுவை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலைகள் நிறுத்திக் கொள்ளும் தூரம்




ஜமாஅத்துல் ஆகிர் பிறை பத்து
உன் மறைவுச் செய்தியை
கொண்டு வந்திருக்கும்

பொழுதுகளின் உச்சரிப்பு
மெல்லியதாய்
இதயத்துடிப்பில்

அதிகாலை
மின்னல்
இடி
என் வானம் விம்மியது
என் நிலம் நீரப் படுக்கையானது

ஜனாஸாவின் நல்லடக்கம்
எவ்வாறு இருக்க வேண்டுமென்று
நீ நினைத்திருந்தாயோ
அவ்வாறே நடைபெற்றது



சாய்ந்தமருது
உன் உடலை சுமக்காத
வலியோடும்...
ஒரு கடலை
சுமந்து வந்தேன்

என் வாசலில் அலைகள்

**எம்.சி.நாபிலா (ஹக்கீமா)**





(இறுதியாகப் பெற்ற வித்தகர் விருது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மர்ஹூம் எம்.எம்.எம். நூறுல்ஹக்கின் நூல்கள்...


### யார் துரோகிகள்?






விடயம் : வரலாறு
முதற்பதிப்பு: 15.10.2017
வெளியீடு: உவைஸ் முஹம்மட்
விலை: ரூபாய்100.00
ISBN : 978-955-43179-3-2

### முஸ்லிம் அரசியலின் இயலாமை





விடயம் : அரசியல், வரலாறு
முதற்பதிப்பு: 27.04.2016
வெளியீடு: எம்.எம்.எம். நூறுல்ஹக்
விலை: ரூபாய் 300.00
ISBN : 978-955-43179-0-1

### அரசியல் சிந்தனைத்துவமும் சமூக இருப்பும்




விடயம் : அரசியல், வரலாறு
முதற்பதிப்பு: 27.08.2011
வெளியீடு:
மருதம் கலை இலக்கிய வட்டம்
விலை: ரூபாய் 250.00
ISBN : 978-955-50248-1-5

### ஈமானிய பேரொளிகள்





விடயம் : இஸ்லாம்
முதற்பதிப்பு: 18.01.2009
வெளியீடு:
மருதம் கலை இலக்கிய வட்டம்
விலை: ரூபாய் 200.00
ISBN:978-955-8105-02-03


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முஸ்லிம் பூர்வீகம்






விடயம் : அரசியல், வரலாறு
முதற்பதிப்பு: 27.08.2006
வெளியீடு:
மருதம் கலை இலக்கிய வட்டம்
விலை: ரூபாய் 200.00
ISBN : 955-1542-00-2

## சிறுபான்மையினர் சில அவதானங்கள்






விடயம் : அரசியல், வரலாறு
முதற்பதிப்பு: 27.05.2002
வெளியீடு:
மருதம் கலை இலக்கிய வட்டம்
விலை: ரூபாய் 150.00
ISBN : 955-8105-01-5

## தீவும் தீர்வுகளும்






விடயம் : அரசியல், வரலாறு
முதற்பதிப்பு: மார்ச்.1998
வெளியீடு:
மருதம் கலை இலக்கிய வட்டம்
விலை: ரூபாய் 100.00
ISBN : 955-8105-00-7

## தெரிந்த விடைகளுக்கான கேள்விகள்



விடயம் : அரசியல்
முதற்பதிப்பு: டிசம்பர்.1996
வெளியீடு:
மருதம் கலை இலக்கிய வட்டம்
விலை: இலவசம்

## ஒளியின் சிறகுகள்




விடயம் : வெள்ளிவிழா மலர்
முதற்பதிப்பு: 22.09.2006
வெளியீடு: அபாபீல்கள் கவிதா வட்டம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆசை தீர
இருளை கொன்று தீர்த்தது
பிறைக்குள் உருவிய
ஒரு பௌர்ணமி

ISBN 978-624-5708-00-0
9786245708000

விலை : 200/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org